**கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை - 2022**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று உள்ளூராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| **(அ)** | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு முரணாகவும் முத்திரைக் கட்டண வருமானத்தை கணக்கீடு செய்கையில் காசு அடிப்படை பின்பற்றப்பட்டிருந்தது. | கணக்கீட்டுக் கொள்கைகள் எதிர்வரும் காலத்தில் கணக்குகளில் வெளிப்படுத்தப்படும். | கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| **(ஆ)** | கமசமக கருத்திட்டத்தில் ரூபா 3,000,000 மதிப்பிடப்பட்ட கிரயத்தில் சூரிய வெளிச்சத்தில் இயங்கும் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு சபைக்கு 2021 ஆம் | தற்போது அதன் பெறுமதியினை உள்டக்கப்படுவதற்கு நடவடிக்கை | சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| **(இ)** | நூலகங்களுக்கு 2022 ஆம் ஆண்டின் இறுதி வரை நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற 4,194 புத்தகங்களின் ரூபா. 500,200 பெறுமதியானது மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி மதிப்பிடப்படாத புத்தகங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அடுத்த நிதியாண்டு கணக்குகளில் உள்ளடக்கப்படும். | நூலகப் புத்தகங்கள் நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 222,090,189 பெறுமதியான 06 மீதிகளுடன் தொடர்புடைய நிலையான சொத்துப் பதிவேடு, உரிமையை உறுதிப்படுத்தும் பதிவேடுகள், முற்பணப் பதிவேடு மற்றும் ஏனைய பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் பற்றிய பதிவுகள் பராமரிக்கப்பட்டு, குறைபாடுகள் சரி செய்யப்படுகின்றன | சொத்துக்களுக்கான எழுத்து மூலச் சான்றுகளை பெற்றுக்கொள்ளவும் பதிவேடுகளில் பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 19(1)(XXIV)(ஆ) ஆம் உபபிரிவு | சபையினால் வருமானம் உழைக்கும் நோக்கில் இடம் பெறும் மணல் அகழ்விற்கும் அந்த மணலை விற்பனை செய்வதற்குமான விலையினை நிர்ணயம் செய்வதற்கும் அமைச்சரின் முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | மண் அகழ்வு, அதன் வர்த்தகம் மற்றும் விற்பனை செய்வதற்கான விலை நிர்ணயம் என்பவை சபையின் தீர்மானத்துக்கு அமையவே | மண் அகழ்வு மற்றும் விலை நிர்ணயம் தொடர்பில் அமைச்சரின் முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மேற்கொள்ளப்ப டுகின்றது. | |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 24(1) மற்றும் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளரின் 2013 யூலை 10ஆந் திகதிய கடித இல. BT/ACLG/PL/Road/2013 | சபையினால் நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் 157 எண்ணிக்கையான வீதிகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும்,அவை வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்படவில்லை. | எதிர்காலத்தில் பிரகடனப்படுத்த வதற்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | வீதிகளை வர்த்தமானி மூலம் அடையாளப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) | சபையினால் 2018, 2021 மற்றும் மீளாய்வாண்டு காலப்பகுதிகளில் குறித்த நோக்கத்திற்கென வழங்கப்பட்ட முற்பணக் கொடுப்பனவுகள் தொகை ரூபா 819,129 மீளாய்வாண்டு இறுதிவரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | முற்பணம் தொகையினை சீராக்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | முற்பணக் கொடுப்பனவுகள் அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானங்களை மிகைத்த மீண்டுவரும் செலவுகள் ரூபா 3,133,210 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 5,850,993 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ள வாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ள வாறான மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,700,000 | 753,593 | 715,117 | 951,006 | 2,209,000 | 1,357,331 | 1,125,296 | 912,530 |
| வாடகை | 5,300,000 | 2,008,130 | 1,645,780 | 1,029,250 | 5,641,050 | 1,876,455 | 1,702,885 | 666,900 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 755,000 | 948,550 | 973,550 | 82,000 | 721,300 | 596,720 | 601,720 | 107,000 |
| ஏனைய வருமானம் | 15,406,000 | 29,523,363 | 30,018,070 | 448,950 | 19,876,000 | 24,152,367 | 24,073,685 | 943,657 |
| | 23,161,000 | 33,233,636 | 33,352,517 | 2,511,206 | 28,447,350 | 27,982,873 | 27,503,586 | 2,630,087 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மதுரங்கேணி மற்றும் ஆலங்குளம் சமூக குடிநீர் திட்டத்தின் மூலமான நீர்வரி நிலுவைத் தொகையான ரூபா 411,006 இனை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கையினை சபை மேற்கொண்டு வருகின்றது. | நீர்வரி நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| ஆலங்குளத்தில் நிர்மாணிக்கப்பட்டு காணப்படும் சபைக்குச் சொந்தமான 08 கடைகளில் 02 கடைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வாடகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டில் வாடகைக்கு வழங்கப்பட்ட 03 கடைகளிலிருந்து நிலுவைத் தொகையான ரூபா 390,000 இனை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி. | வாடகை நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(இ) முத்திரைக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2022 திசெம்பர் 31 திகதியிலிருந்து கடந்த 05 ஆண்டுகளாக கிடைக்க வேண்டியிருந்த் முத்திரைக் கட்டணம் ரூபா 881,800 ஆகும். | முத்திரைத் தீர்வை நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | முத்திரைக் கட்டண வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(ஈ) ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| பனிச்சங்கேணி மற்றும் வாகரை-மத்தி ஆகிய சனசமூக நிலையங்களிடமிருந்தான மணல் விற்பனை வருமான நிலுவைத் தொகையான ரூபா 240,000 இனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் இல்லை | மணல் விற்பனை வருமான நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சபைக்கு நன்கொடையாக பெறப்பட்ட 15 சொத்துக்கள் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற போதிலும், அவற்றின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு நன்கொடையாக பெறப்பட்ட அனைத்துச் சொத்துக்களும் மதிப்பீடு செய்யப்பட்ட பின்பு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும். | நன்கொடைப் புத்தகங்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| **(அ)** | சபைக்குட்பட்ட 07 நூலகங்கள் மற்றும் வாசிப்பு நிலையங்களில் மொத்தமாக 15,902 எண்ணிக்கையான புத்தகங்கள் காணப்படுகின்ற போதிலும், கடந்த 02 வருடங்களாக நூலகப் புத்தகக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நுலகங்களில் உள்ள புத்தகங்களுக்கான கணக்கெடுப்பினை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | புத்தக இருப்புக்களுக்கு வருடாந்தம் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| **(ஆ)** | சபையில் பழுதடைந்து காணப்படுகின்ற 12 வாகனங்களை திருத்துவதற்கும் பயன்படுத்த முடியாமல் காணப்படுகின்ற 03 வாகனங்களை அகற்றுவதற்குமான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையில் நிதி வசதி கிடைக்கப்பெற்றதும் திருத்தப்படும். | வாகனங்களை திருத்துவதற்கும், பயன்படுத்த முடியாத வாகனங்களை அகற்றுவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | **ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்**<br>முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணி பட்டியல்களுக்கமைய, சபையில் காணப்படும் 07 பதவிகளுக்கு 09 வெற்றிடங்கள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | வெற்றிடம் மற்றும் மேலதிக ஆளணிகள் தொடர்பில் சபையினால் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மேலதிக ஊழியர்களை சீர் செய்வதற்குமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | **ஊழியர் கடன்**<br>ஓய்வு பெற்றுச் சென்ற 02 உத்தியோத்தர்கள் மற்றும் தொழில் வறிதாக்கப்பட்ட 01 உத்தியோகத்தரின் கடன் நிலுவைத் தொகையான ரூபா 217,322 இனை நான்கு ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்படாமல் நிலுவையாகக் காணப்படுகின்றது. | அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | ஊழியர் கடன் நிலுவைகள் அறவிடப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலத்தில் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும். | வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 14 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய முக்கிய செயற்பாடுகள் தொடர்பில் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று சபையினால் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் இக்குறைபாடு நிவர்த்தி செய்யப்படும். | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |